உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி-௪௩.] பார்த்திப-ஹு தைமீ [பகுதி-௩.

Vol. 43. January—February 1946. No. 3.

சிலப்பதிகாரக் காப்பிய இலக்கணம்*

சிலப்பதிகாரம் என்பது தமிழில் உள்ள ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று; இற்றைக்கு ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகளுக்கு முன் சேரநாட்டரசர்குடியிற்பிறந்த இளங்கோவடிகள் என்னும் புலவர்பெருமான் இயற்றியது. அவர் இக்காப்பியத்தைப் பாடுதற்குச் சில ஆண்டுகளுக்குமுன்னரே இவ் வரலாற்றுத்தலைவனும் தலைவியுமாகிய கோவலன் கண்ணகி என்பார்வாழ்க்கை முடிவடைந்தது. அவர்கள் காவிரிப்பூம்பட்டினத்துப் பிறந்து மதுரைக்கு வந்ததும், சிலம்புகாரணமாகக் கோவலன் மடிந்ததும், அது பொறாத கண்ணகி சேரநாடுசென்று விண்ணுலகம் சென்றதும் ஆகிய இந்நிகழ்ச்சிகளை நேரிற்கண்டவர் சங்கப்புலவருள் ஒருவராகிய தண்டமிழாசான் சாத்தனார் என்பார். அவர் இளங்கோவடிகளுக்கு அறிவிக்க, கேட்ட அவ்வடிகள், சிறந்தசுவைக்கு நிலைக்களமாக இவ்வரலாறு அமைந்தமையால் இதனை ஒரு பெருங்காப்பியமாகப் பாடிமுடித்தனர்.

இக் காப்பியத்திற்கு மணிமேகலை என்பதுபோல வரலாற்றுத் தலைவியாகிய கண்ணகியின்பெயரைக் குறித்திருக்கலாம். அப்படிப் பெயரிடாமல், சிலப்பதிகாரம் என்று பெயர் அமைத்ததற்குச்

[*இது, திருவாளர் மகாமகோபாத்தியாய பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியாரவர்கள் 22—11—45-ல் திருச்சி வானொலிநிலையத்திற் பேசியது. அந்நிலையத்தார் அனுமதிபெற்று வெளியிடலாயிற்று.]

சிறந்த காரணமுண்டு. பெரிய கவிகள் தாம் பாடும் காப்பியவாலாற்றுள் மிகச் சுவைபயந்துநிற்கும் வரலாற்றுப்பகுதியொன்றையொட்டி அக்காப்பியத்திற்குப் பெயரிடுவதுண்டு. வடமொழியிலே சூத்திரகன் என்னும் புலவர் தாம் இயற்றிய நாடகம் ஒன்றிற்கு "மிருச்சகடிகம்" என்று பெயரிட்டனர். மிருச்சகடிகம் என்பது மண்ணுலாகிய சிறுவண்டி என்னும் பொருளுடையதாகும். இந்நாடகவரலாற்றுத் தலைவர்களாகிய வசந்தசேனை சாருதத்தன் என்பவருள் ஒருவர் பெயரைக் குறிப்பிட்டிருக்கலாம். அப்படியில்லாமல், அவ்வரலாற்றிற் சுவைமிக்க நிகழ்ச்சியொன்றைக் காரணமாகக்கொண்டு "மண்வண்டி" என்று பெயரிட்டனர். அதுபோலக் கண்ணகிகாற்சிலம்புகாரணமாகவே கோவலனும் கண்ணகியும் மதுரைபோந்ததும், கோவலன் வெட்டுண்டு இறந்ததும், பாண்டியன் நெடுஞ்செழியன் நீதிபிழைத்தது பொறாது உயிர்நீங்கியதும், அது தெரிந்து அவன் பட்டத்தரசியாகிய கோப்பெருந்தேவி மாண்டதும், மதுரை எரியுண்டதும், கண்ணகி சேரநாடுபோந்து விட்புலஞ்சென்றதும் ஆகிய இவையெல்லாம் நிகழ்ந்தன. ஆதலால் இக்காப்பியத்திற்குச் சிலம்பு - அதிகாரம் சிலப்பதிகாரம் என்று பெயரிடப்பட்டது.

இக்காப்பியத்திற்கும் மூன்று என்னும் எண்ணிற்கும் பொருத்தமான தொடர்புண்டு என்று கண்ட ஆசிரியர், இக்காப்பியத்தைப் புகார்க்காண்டம் மதுரைக்காண்டம் வஞ்சிக்காண்டம் என முக்கூறுபடுத்து முடித்தனர்; தமிழ்மொழியிலுள்ள இயல், இசை, நாடகம் என்னும் மூன்றுபகுதிகளும் இதன்கண் விரவிவரப் பாடினர்; சோழர், பாண்டியர், சேரர் என்னும் மூன்று தமிழ்ப்பெருமன்னர்களையும், அவர்தம் மூன்றுநாடுகளையும் சிறப்பித்துள்ளார்; இக்காப்பியம் நுதலியபொருளும் மூன்றெனக் கண்டனர். அவை:—

"அரசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற் றுவதும்
உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோ ரேத்தலும்
ஊழ்வினை உருத்துவந் தூட்டும் என்பதும்"

ஆம். இம் மூன்றுபொருளையும் தன்னகத்தடக்கிச் 'சூழ்வினைச் சிலம்புகாரணமாகச் சிலப்பதிகாரம் என்னும் பெயரால் நாட்டுதும்

யாம் ஓர் பாட்டுடைச்செய்யுள்' என்றபடி இச்சிலப்பதிகாரம் பாடி முடிக்கப்பட்டது.

காப்பியங்களிற் காணப்படும் சுவைகள் ஒன்பது வகையாகும். அவற்றுள் பெருங்காப்பியங்களுள் மிகுதியாகவும் சிறப்பாகவும் காணப்படுவன மூன்று. அவை உவகை, அவலம், பெருமிதம் என்பனவாம். இவற்றை முறையே சிருங்காரம், சோகம், வீரம் என்று வடநூலார் கூறுவர். இம்மூன்றனுள் ஒன்றேனும் விரவாத காப்பியம் சுவையுணர்ச்சியுடையார்க்கு விருந்தாகமாட்டாது. ஏனைய சுவைகளெல்லாம் சிறுவரவினவாகவும், இம்மூன்றனுள் ஒன்று அல்லது மூன்றும் பெருவரவினவாகவும் தோன்றவைத்துச் செய்யப்பட்ட காப்பியங்களே கற்பாருள்ளத்தைக் கவருமியல்பினவாகும். இவ்வுண்மையுணர்ந்த இளங்கோவடிகள் எல்லாச்சுவைகளுக்கும் இக்காப்பியம் நிலைக்களமாகப் பாடினார்; ஆயினும், சிறப்பாக மேற்குறிப்பிட்ட உவகை முதலிய மூன்றனையும், முறையே மூன்றுகாண்டங்களினும் தோன்றவைத்தார். முதலாவதாகிய புகார்க்காண்டத்திற் கண்ணகிதிருமணம், மாதவியின் ஆடல்பாடல், இந்திரவிழவு, கடலாடல் முதலிய இன்பப்பகுதிகளே பெரும்பாலும் கூறப்பட்டுள்ளன. கோவலன்,

"மாசறு பொன்னே வலம்புரி முத்தே
காசறு விரையே கரும்பே தேனே"

என்று கண்ணகியின் நலத்தைப் பாராட்டி,

"தூமப் பணிகளொன்றித் தோய்ந்தா லெனவொருவார்
காமர் மணிவியெனக் கைகலந்து—நாமந்
தொலையாத இன்பமெலாம் துன்னினர் மண்மேல்
நிலையாமை கண்டவர்போல் நின்று"

என்றபடி ஐம்புலனும் ஆரத்துய்த்த செய்திகள் இப் புகார்க்காண்டத்தில் உள்ளன. மேலும் ஆடலும், பாடலும், அழகும் என்று கூறிய மூன்றின் ஒன்றுங் குறைபடாத மாதவி யென்னும் ஆடல் மடந்தையின் இனிய யாழிசையும் மிடற்றுப்பாடலும் அபிநயக்கூத்தும் கோவலன் அக் கணிகையொடு மருவி இன்பநுகர்ந்தசெய்திகளும் அக்காண்டத்திலேயே உள்ளன. ஆதலின் அக்காண்டத்தில்

விஞ்சிநிற்கும் சுவை சிருங்காரரசம் எனப்படும் உவகையேயாகும். இரண்டாவதாகிய மதுரைக்காண்டத்தில் முழுதும் அவலச்சுவையே விரவிநிற்பது அறியலாம். கண்ணகியை மணஞ்செய்துகொண்டபோது அவள் நலத்தைப் பாராட்டியதாக முன்னர்க் குறிப்பிடப்பட்டுள்ளது. அப்பாராட்டிலே கோவலன் தன் ஐம்புல நுகர்ச்சிக்கும் அவள் இனியளாயநிலையைக் கருதிக் கூறியதாக அறிகின்றோம். மேலும் ஆங்கு,

> "அரும்பெறற் பாவாய் ஆருயிர் மருந்தே
> பெருங்குடி வாணிகன் பெருமட மகளே
> மலையிடைப் பிறவா மணியே யென்கோ
> அலையிடைப் பிறவா அமிழ்தே யென்கோ
> யாழிடைப் பிறவா இசையே யென்கோ
> தாழிருங் கூந்தல் தையால்"

என்று பாராட்டியதையும் அறிகின்றோம். அங்ஙனம் பாராட்டியவெல்லாம் அவள் இளமையும் அழகும் தனக்கு ஒத்தனவாகக் கண்டு காதற்சுவையில் ஈடுபட்ட நிலையிலேயேயாம். இன்பத்துறையில் முழுகிக்கிடந்த அந்நிலையிற் சிறந்த பல நற்குணங்களுக்கும் நிலயமாக விளங்கிய கண்ணகியின் காட்சி அப்பொழுது அவனுக்கு அவ்வாறு புலப்பட்டது. பின்னர் மதுரையில் மாதரி என்னும் ஆயர்குலச்செல்வியின் இல்லத்திற் கண்ணகியைவைத்துவிட்டு, அவள் காற்சிலம்பில் ஒன்றை எடுத்துக்கொண்டு அகநகர்க்குப் புறப்படும்பொழுது, பிரிவாற்றாதநிலையில் அக்கற்பரசியின் காட்சியை எவ்வாறு அநுபவித்தான் என்பதை ஆசிரியர் உளங்கரைந்து பாடியுள்ளார். அக்காட்சியே அவ்வுத்தம மணமக்களின் இறுதிக்காட்சி என்பதையும், மீண்டும் அவர்களுடைய இனிய சந்திப்பு நிகழாது என்பதையும், சிறந்து உயர்ந்தமுறையில் வாழ்ந்த இவர்களுக்குக் கொடிய தீவினைப்பயன் விளையுங்காலம் நெருங்கியிருப்பதையும் நூலாசிரியர் அறிந்தவராதலின் அத்துன்பத்தில் உள்ளுங்கன்றிக் கோவலன்வாய்மொழியாகப் பாடிய பாடற்பகுதிகள்,

"குடிமுதற் சுற்றமும் குற்றிளை யோரும்
அடியோர் பாங்கும் ஆயமும் நீங்கி
நாணமும் மடனும் நல்லோ ரேத்தும்
பேணிய கற்பும் பெருந்துணை யாக
என்னொடு போந்தீங் கென்றுயர் களைந்த
பொன்னே கொடியே புனைபூங் கோதாய்
நாணின் பாவாய் நீணில விளக்கே
கற்பின் கொழுந்தே பொற்பின் செல்வி
சீறடிச் சிலம்பின் ஒன்றுகொண் டியான்போய்
மாறி வருவன் மயங்கா தொழிகென"

என வருவன.

இங்கே கோவலன் கண்ட காட்சிக்குக் கண்ணகியினுடைய சிறந்த குணஞ்செயல்களின் வடிவங்களே புலனாயின. பெண்களை வெளியூர்களுக்கு ஆடவர் கூட்டிச்சென்றால், அப் பெண்பாலாரைப் பேணும் பொறுப்பு ஆண்மக்களுடையதாகும். கண்ணகி வழி நடந்துசெல்லுங்கால், வெப்பத்தால் தன்கால் கொப்புளங்கொண்டது அறிந்து இத்துன்பத்தை இன்னுயிர்க்கணவர் எய்துவரோ என்று கணவன் நிமித்தம் இரங்கிப் பரிகரிக்கமுயன்றாளேயன்றித் தனக்குத் துன்பமாக எண்ணினாளல்லளாம். இக்குணநலத்தை யுட்கொண்டே,

"தன்துயர் காணாத் தகைசால் பூங்கொடி"

என்று கவுந்தியடிகளும்,

"என்னொடு போந்து ஈங்கு என் துயர் களைந்த
பொன்னே கொடியே"

என்று கோவலனும் பாராட்டுவாராயினர். பொன்னே, கொடியே என்பது முதலியன வெறும் அடுக்குமொழிகளல்ல. சுடச்சுடப் பொன் ஒளிமிகல்போல இல்லத்தில் இனிதிருந்த இன்பநிலையிலும் காட்டில் வெப்பத்தில் நடந்துசெல்லும் துன்பநிலையிற் கண்ணகியின் உயர்குணம் மிகுதியாக விளங்கியதறிந்து பொன்னேயென்றானாம். இங்ஙனமே அம் மொழிகளெல்லாம் கருத்துடையனவென்பது உய்த்துணர்வார்க்குப் புலனாகும். இங்ஙனம் என்றும் இல்லாத முறையில் மனங்குழைந்து பாராட்டிப் பிரிந்த கோவலன்

ஊழ்வலியாற் கள்வனாகக் கருதப்பட்டு எதிர்பாராதநிலையிற் கொல்லப்பட்டு இறந்ததும் கண்ணகியின் அடங்காத்துயர்நிலையும் படிப்பவருள்ளத்தை உருக்குமியல்பினவாம். கோவலன் இறப்பைக் கேட்டவுடன் கண்ணகிபால் நிகழ்ந்த பதைப்பை ஆசிரியர் நெஞ்சம் பதைத்துப் பாடியுள்ளார். காலைப்பொழுதிற் கண்ணகியைவிட்டுப் பிரியுங்காற் கோவலன் தன்குடுமியிற் கட்டியிருந்த மலர்மாலையை அவள் கூந்தலிற் சேர்த்தினனாக, அதனை ஏற்றுக்கொண்டு உவகையில் ஈடுபட்ட கண்ணகி மாலைப்பொழுதில் அவன் வெட்டுண்டு கிடந்தநிலையில் அவனுடலைத் தான் பார்க்கத் தன்னை அவன் பாராததனால் நேர்ந்த கடுந்துயரத்தை மேற்கொண்டாள் என்னும் பொருள் தோன்ற,

“வண்டார் இருங்குஞ்சி மாலைதன் வார்குழன்மேற்
கொண்டாள் தழீஇக் கொழுநன்பாற் காலைவாய்ப்
புண்டாழ் குருதி புறஞ்சோர மாலைவாய்க்
கண்டாள் அவன்றன்னைக் காணாக் கடுந்துயரம்”

என்று ஆசிரியர் பாடியிருப்பதும், கண்ணகி பாண்டியனவைக்களத்தில் வழக்குரைக்கச்சென்றுநிற்கும்நிலையை,

“காவி யுகுநீரும் கையில் தனிச்சிலம்பும்
ஆவி குடிபோன அவ்வடிவும்”

என்றும்,

“மெய்யிற் பொடியும் விரிந்த கருங்குழலும்
கையிற் றனிச்சிலம்பும் கண்ணீரும்—வையைக்கோன்
கண்டளவே தோற்றானக் காரிகைதன் சொற்செவியில்
உண்டளவே தோற்றான் உயிர்”

என்றும் அவலவுருவாகச் சித்திரித்திருப்பதும் நெஞ்சத்தையுருக்குநிலையினவாம். இதுபற்றியே,

“நெஞ்சை-யள்ளுஞ் சிலப்பதிகாரமென்றோர் மணி
யாரம் படைத்த தமிழ்நாடு”

என்று பாரதியார் பாராட்டினர். மேலும் கோவலன் இறந்துபட்டானாகக் கண்ணகி, கணவனாகிய உயிர்நீங்க, வெற்றுடல்போலத் தன் வயமிழந்துசென்று, நேர்ந்த துயரத்தைப் பாண்டியன்முன்னிலையில் எடுத்துரைத்தவளவில், “அரசநீதிபிழைத்த யானோ அர்சன்?

யானே கள்வன்" என்று மயங்கிவீழ்ந்து உயிர்நீத்ததும், அதுகண்டு அவன் மனைவியாகிய கோப்பெருந்தேவி,

"தன்னுயிர்கொண் டவனுயிர் தேடினள்போற்
பெருங்கோப் பெண்டும் ஒருங்குடன் மாய்ந்தனள்"

என்றபடி மரணம் எய்தியதும், மதுரைமாநகரம் எரியுண்டதும் ஆகிய வருந்தத்தக்க இவ்வெல்லா நிகழ்ச்சிகளும் மதுரைக்காண்டத்தில் உள்ளனவாதலின் அது அவலச்சுவை வடிவாகவே அமைந்தது என்று கூறலாம்.

இனி மூன்றாவதாகிய வஞ்சிக்காண்டத்திற் செங்குட்டுவன் வீரமும், ஆரிய அரசர்களாகிய கனகவிசயரை அவன் போரில் வென்று அடிப்படுத்தியதும், பிறவும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. செங்குட்டுவன் வீரபத்தினியாகிய கண்ணகியார்க்குப் படிவஞ் சமைக்க இமயமலையிற் கல்லெடுத்துக் கங்கையில் நீர்ப்படை செய்து கனகவிசயர் என்னும் ஆரிய அரசர்முடியிற் சுமப்பித்துத் தன் நகரத்திற்குக் கொண்டுவந்தான் என்பது வரலாறு. இந் நிகழ்ச்சியை ஆசிரியர் "மாதவிமடந்தை கானற்பாணி, கனகவிசயர்தம் முடித்தலை நெரித்தது" என்று அழகுபெறக் கூறியுள்ளார். மாதவி கடற்கரையிற் பாடிய பாட்டுக் காரணமாகவே கோவலன் பிரிந்ததும் பின் நிகழ்ச்சிகளும் ஆயின எனக் கண்ட ஆசிரியர் இவ்வாறு கூறினர். மேலும் செங்குட்டுவன்வீரச்செயல்களைப்பற்றி இக்காண்டத்திற் சிறப்பாகப்பலஇடங்களிற் காணலாம்.

"ஆரிய மன்ன ரீரைஞ் ஞூற்றுவர்க்கு
ஒருநீ யாகிய செருவெங் கோலம்
கண்விழித்துக் கண்டது கடுங்கட் கூற்றம்"

எனவும்,

"கோட்டுமாப் பூட்டி வாட்கோலாக
ஆளழி வாங்கி யதரி திரித்த
வாளேருழவன்"

எனவும் கூறிய பகுதிகள் அஞ்சத்தக்க அவன் வீரச்செயலின்மேம் பாட்டைப் புலப்படுப்பனவாம். இவ்வாறு மூன்றுகாண்டங்களிலும் முறையே உவகை, அவலம், பெருமிதம் என்னும் மூன்றுசுவைகளும் விஞ்சிநிற்றலை அறியலாம்.

இனி இக்காப்பியத்திற்கு இயலிசைநாடகப் பொருட்டொடர் நிலைச்செய்யுள் என்று ஒரு பெயருண்டு. இதன்கண் முப்பது பாடல்கள் உள்ளன. பெரும்பாலும் ஆசிரியப்பாக்களேயுள்ளன. அவையெல்லாம் இயற்றமிழ்ப் பகுதியைச் சார்ந்தவை. கானல்வரி வேட்டுவவரி முதலிய வரிப்பாடல்களெல்லாம் இசைத்தமிழ்ப்பகுதியைச்சார்ந்தவை. ஆய்ச்சியர்குரவை குன்றக்குரவை முதலியன நாடகவுறுப்புக்களுடைமையால், அவை நாடகத்தமிழ்ப்பகுதியைச் சார்ந்தவையாகும். அரங்கேற்றுகாதையிற் கூறப்பட்ட பொருள்கள் இசை நாடகங்களின் இலக்கணங்களாகும். மேலும், அலங்கார நூலிற் பெருங்காப்பிய இலக்கணமாகக் கூறப்பட்ட எல்லாவற்றையும் இக் காப்பியம் தன்னகத்துக் கொண்டிருப்பதோடு வாழ்த்து முதலியவற்றிலும் வரலாற்றை உள்ளவாறு கூறிமுடிப்பதிலும் தனித்த சிறப்புடையதென்பது அறியத்தக்கது.

இக் காப்பியம் முப்பதுபாடல்களையுடையது. ஒவ்வொரு காண்டத்தின் இறுதியிலும் கட்டுரையென்னும் தலைப்பில் அக் காண்டம் முதலிய பொருள்களும் அதன்கண் அமைந்த இயலிசை நாடகப் பகுதிகள் இன்னவென்பதும் சுருக்கிக் கூறப்பட்டுள்ளன. நூன்முடிவிற் கட்டுரையொன்றுள்ளது. அதன்கண்,

> "தெரிவுறு வகையாற் செந்தமிழியற்கையில்
> ஆடிநன் னீழலி னீடிருங் குன்றங்
> காட்டுவார்போற் கருத்து வெளிப்படுத்து
> மணிமேகலைமேல் உரைப்பொருண் முற்றிய
> சிலப்பதிகாரம் முற்றும்"

என்று கூறப்பட்டுள்ளது. ஒரு சிறிய கண்ணாடியிற் பெரிய மலையின் முழு உருவத்தையும் அடக்கிக்காட்டுதல்போல விரிந்த கருத்துக்களைச் சுருங்கிய பாடலடிகளில் ஆசிரியர் அடக்கிக் காட்டியுள்ளார்: என்னும் இது உண்மையே. இதற்கு எடுத்துக் காட்டாகப் பல செய்திகளை இக்காப்பியத்தில் அறியலாம்.

இங்ஙனம் முத்தமிழ்நலமும் செறிந்த வித்தகக்காப்பியம் இச் சிலப்பதிகாரமாதலின் இது தமிழிலக்கியங்களுள் தலைமணியாக விளங்குகிறது.

முத்தொள்ளாயிரத்தில் மூன்று

வித்துவான், பண்டிதர்

திரு. கா. பொ. இரத்தினம் அவர்கள் B.A. (Hons.) B.O L.

(விரிவுரையாளர், அரசினர் ஆங்கில ஆசிரிய கலாசாலை, இலங்கை.)

ஒருபானைசோற்றில் ஒருசோற்றைப் பதம்பார்ப்பது உலகவழக்கம். ஒருசோற்றின்பதம் எவ்வாறு இருக்கிறதோ அவ்வாறே பானையிலுள்ள சோறுமுழுதும் இருக்கும். இதைப்போல் ஒருநூலிலுள்ளசெய்யுள்கள் முழுவதின் தன்மையையும் அறிவதற்கு அதில் ஒருசெய்யுளைப் படித்துப்பார்த்தாற்போதும் என்று கூறத்தக்க தகுதிவாய்ந்த நூல்கள் எந்த மொழியிலும் குறைவாகத்தான் காணப்படுகின்றன. தமிழ்மொழியிலுள்ள இத்தகைய நூல்களுள் முத்தொள்ளாயிரமும் ஒன்று. அதனைச் சிறந்ததென்றுங் கூறலாம்.

முத்தொள்ளாயிரத்தைப்பற்றியசெய்திகளைத் தமிழ்நாடு சமீபகாலத்திற்றான் நன்கறியத்தொடங்கியது. புறத்திரட்டிற் சில முத்தொள்ளாயிரச் செய்யுட்கள் தொகுக்கப்பட்டுள்ளன. அவற்றைப் படித்தார்கள்; செஞ்சொற் கவியின்பத்தை உண்டார்கள்; தெவிட்டாத இன்பம் பெருகி வழிவதைக் கண்டார்கள்; மிகுதிச்செய்யுள்கள் எங்கே? நூல் எங்கே? என்று தேடி அலைந்தும் பெறமுடியவில்லை. ஏறக்குறைய நூறுசெய்யுட்களே இப்பொழுது கிடைத்திருக்கின்றன. இவற்றைப் படிப்பவர்கள் 'முத்தொள்ளாயிரம்செய்யுள்களும் (அஃதாவது 2700 செய்யுள்களும்) கிடைத்திருந்தால் எங்களுக்கு எவ்வளவு பெரிய விருந்தாயிருக்கும்? தமிழ்மொழிக்கு எவ்வளவு பெருமையாயிருக்கும்?' என்று பலவாறுகூறி வருந்துகின்றனர். ஏன்? உண்மையில் செய்யுள்கள் யாவும் உயிருள்ளன; உருவம், உணர்ச்சி, ஓசை, வேகம், முதலிய எல்லாவற்றையும் பொருத்தமாகக்கொண்டு மிளிர்கின்றன. கவியுள்ளத்தில் உண்டான உருவம் கொஞ்சமும் மாறாது படிப்போருள்ளத்திலும் பதிகிறது; உணர்ச்சியை எழுப்புகிறது; இன்பத்தைப் பெருக்குகிறது; கவியுள்ளமும் கற்போருள்ளமும் செய்யுளும் கலந்து ஒன்றுகின்றன.

சேர சோழ பாண்டியர் மூவரும் தமிழ்நாட்டையாண்ட முடியுடை வேந்தர்கள். இவ்வரசர்களையும் இவர்கள் நாடுமுதலிய உறுப்புக்களையும் சேர்த்து முத்தொள்ளாயிரம் சிலப்பதிகாரத்தைப்போலக் கூறுகிறது. சேரனைப்பற்றியன தொள்ளாயிரம்செய்யுள்கள், சோழனைப்பற்றியன தொள்ளாயிரம் செய்யுள்கள், பாண்டியனைப்பற்றியன தொள்ளாயிரம்செய்யுள்கள். மூன்றரசர்கள்மேலும் மொத்தமாக முத்தொள்ளாயிரம் (2700). இவற்றுள்,

ஒவ்வொரு அரசர்மீது பாடப்பட்ட ஒவ்வொருசெய்யுளைமாத்திரம் ஈண்டுக் காட்டுதும். முதலிற் சேரன்மேற் பாடப்பட்ட செய்யுளைப் பார்ப்போம்.

வெள்ளந் தீப்பட்டது.

இயற்கைக்காட்சிகளைக் குழந்தைகள்முதல் கிழவரீறாக யாவரும் கண்டு மகிழ்கிறார்கள். அக்காட்சிகள், அறிவு அனுபவம் மனநிலை என்பவற்றிற்கேற்ப அவர்கள் உள்ளத்திற் பல கருத்துக்களை உண்டாக்கும். அக்கருத்துக்களிற் சில உருவம்பெற்றுச் சொற்கள்மூலம் வெளிவருதலும் உண்டு.

சேரநாட்டு மருதநிலத்து நீர்வளம் நிறைந்திருந்தது; செவ்வாம்பல்மலர்கள் பல மிகநெருக்கமாக மலர்ந்துவிளங்கின; எங்கும் ஒரே செந்நிறம். அங்குப் பறவைகள் தம் பார்ப்பொடு வதிந்தன. இடையிடையே அவை தம் குஞ்சுகளைச் சிறகால் அணைத்தன. இந்த இயற்கைக் காட்சிகளை நாம் கண்டால் என்ன கூறுவோம்? இவற்றைக் கண்ட முத்தொள்ளாயிர ஆசிரியருக்கு இயற்கையில் ஒரு செயற்கை தோன்றுகிறது. அபூர்வமாக - அதிசயிக்கத்தக்கதாக வெள்ளந்தீப்பட்டதென்கிறார். அவர் கூற்றுக்கு அங்குள்ள பறவைகள் சான்றுபகர்கின்றன. அவையும் தீயைக்கண்டு பயந்து குஞ்சுகளை அணைத்துக்கொண்டு ஆரவாரிக்கின்றன. வெள்ளத்தில் நெருப்புப்பிடித்துவிட்டால் யாருக்குத்தான் அச்சம் ஏற்படமாட்டாது?

"அள்ளற் பழனத்து அரக்காம்பல் வாயவிழ
வெள்ளந்தீப் பட்ட தெனவெரீஇப்-புள்ளினந்தம்
கைச்சிறகாற் பார்ப்பொடுக்கும் கவ்வை யுடைத்தரோ
நச்சிலைவேற் கோக்கோதை நாடு"

என்பதுதான் புலவருடைய செய்யுள். இச்செய்யுளிலுள்ள இன்னொரு நயத்தையும் பார்ப்போம். சேரன்மீதன்றோ புலவர் இச்செய்யுளை இயற்றினார்? அப்படியாயின் அவனைப்பற்றியுஞ் சில கூறவேண்டுமே? வேலையேந்தியவனாய்ச் சேரன் இருக்கின்றான். இருந்தாலும் என்ன! அவன் நாட்டில் எல்லாம் முறையாக நடக்கிறதா? அச்சமும் ஆர்வமும் இல்லையென்று கூறலாமா? அப்படிக்கூறிவிட்டால் அதில் என்ன தனிச்சிறப்பு உண்டு? என்ன புலமை இருக்கிறது? ஆதலின் அவன் நாட்டில் ஒரு பயம் உண்டு: என்று சுட்டிக்காட்டுதலன்றோ போற்றத்தக்கது! முத்தொள்ளாயிர ஆசிரியர் பறவைகளின்பயத்தை எடுத்துக்காட்டிச் சேரனுடைய வீரத்தைப் பழிப்பதுபோலப் புகழ்கிறார். அவ்வாறு புகழ்வது புலவர்களுக்குத்தான் நன்குவாய்க்கிறது—என்பதற்கு இச்செய்யுளே சான்றுபகர்கிறது.

இனிப் பாண்டியனைப்பற்றிப் பாடப்பட்ட செய்யுளை நோக்குவோம்.

இளையளாய் மூத்திலள்கொல்லோ?

முற்காலத்தில் அரசர் உலாப்போதல் வழக்கம். அவ்வுலாக் கண்கொள்ளாக் காட்சியுடையதாயிருக்கும்; அன்றியும் புலவர்களாற் புகழ்ந்து பாடப்படும் பெருமையும் உண்டு. அதனைச் சிறப்பித்துப் பாடிய நூல்களுக்கு 'உலா' என்றே பெயரிட்டுள்ளனர். அவ்வுலாக்காட்சியைக்கண்டு மகிழ மக்கள் யாவரும் விரும்புவர். இளமகளிர்க்கு அஃதொரு பெருவிருந்தாயிருக்கும்.

பாண்டியமன்னன் உலாப்போந்தபொழுது அவனைக்கண்ட ஓர் இளம் பெண் அவனழகில் ஈடுபட்டு மனத்தைப் பறிகொடுத்தாள். அவனையடைய அவளால் எப்படிமுடியும்? அதனால் அவன்மேற்கொண்ட காதல்நோய் அவள் உள்ளத்திற் கொழுந்துவிட்டெரியத்தொடங்கிற்று; உணவும் உறக்கமும் படிப்படியாகக் குறைந்தன; உடல் வாட்டமடைந்தது; பித்துப்பிடித்தவள்போற் காணப்பட்டாள். இம்மாற்றங்களை அவள்தாய் கண்டாள். மகள் இவ்வாறு வாடிவருந்துவதை அவளாற் பொறுக்கமுடியவில்லை. பாண்டியன் அடிக்கடி உலாப்போவது வழக்கம். மகளும் ஓயாது அவனைப் பார்த்தலாற் காதல்நோய் மிகுகிறது. பாண்டியனை 'இந்தப்பக்கத்திற்கு நீ வராதே' யென்று கூறித் தடுக்கமுடியாது. ஆகையினால் மகளைக் காப்பாற்றவிரும்பிய தாய் 'பாண்டியனை நீ இனிப் பார்க்கப்படாது' என்று அவளுக்குக் கட்டளையிட்டாள். தன் அருமைமகளின் நலங்கருதித் தாய் இட்ட கட்டளை மகளுக்கு முட்டுக்கட்டையாயிருந்தது. அதனால் ஆத்திரமும் துக்கமும் மகளுக்கு ஏற்பட்டன. 'என் தாய் உணர்ச்சியற்றவளாயிருக்கிறாளே. உரியபருவத்திற் காதல் உண்டாவது இயற்கையே. இளமகளிர் அழகுள்ள ஆடவரைக் காணிற் காதல் அரும்புவதும் மலர்வதும் புதுமையல்ல. அழகே உருவாக அமைந்த பாண்டியனைக்கண்ட மகளிர் அவனை மறக்கமுடியுமா? அவர்கள் வீட்டுப்பக்கமாக அவன் உலாப்போகும்பொழுதும் மகளிர் அவனைப் பாராதிருக்கமுடியாதே. இயற்கையாயெழுந்த காதல் தூண்டப் பாண்டியனைப் பார்த்தாவது யான் இன்புறுதலில் என்ன பிழையுண்டு? இளமகளிர் யாவரும் இப்படித்தானே செய்வார்கள். இதனைச் செய்யவேண்டா என்று என்னை என் அன்னை தடுக்கிறாள்? பொதுவாக நல்லவளாயிருக்கும் என் அன்னை - உலகவிஷயங்களை நன்கு அறிந்த அன்னை- இப்படித் தடுக்கலாமா? இப்படித் தடுத்தலால் என்னுள்ளம் படும் பாட்டை இவள் அறியாதிருக்க முடியாது. இஃது என்னகொடுமை? இவள் ஒருவேளை இளமைப்பருவத்தை - காதல் அரும்பும் காலத்தை - அடையாமலே கிழவியாயினளோ? இப்படியிருந்தாற்றான் ஒருணர்ச்சியுமின்றி, இயற்கைக்கு மாறாக என்னைப் பாண்டியனைப் பாராதே' என்று தடுக்கலாம்'' என்று இவ்வாறு ஆத்திரத்துடன் எண்ணுகிறாள். எண்ணியவள் தன் தோழியைக் கண்டவுடன் தன் இடர்ப்பாட்டை எடுத்துக்கூறுகிறாள்;

வளையவாய் நீண்டதோள் வாட்கண்ணுய் அன்னை
இளையளாய் மூத்திலள் கொல்லோ—தளையவிழ்தார்
மண்கொண்ட தானை மறங்கனல்வேல் மாறனைக்
கண்கொண்டு நோக்கலேன் பாள்.

என்று. இதனுள் 'அன்னை இளையளாய் மூத்திலள்கொல்லோ' என்று இப்பெண் துடித்துக்கொண்டுகூறும் இக்கூற்றுப் பெருங்கதையில் ஒரு நிகழ்ச்சியை ஞாபகப்படுத்துகிறது. வாசவதத்தைக்கு யாழ்பயிற்றிய உதயணன் அவள்மேற் காதல்கொண்டான். அக்காதல் நாளுக்குநாள் வளர்ந்து பல வேறுபாடுகளை உண்டாக்கிற்று. அவற்றை மறைக்க எண்ணிய உதயணன் நருமதை என்னும் நாடகக்கணிகையைத் தன் மாளிகைக்குக் கொணர்வித்து அவளைப் பாராட்டிப் பல்பொருளீந்து அனுப்பினுன். அச்செய்தி நகரெங்கும் பரந்தது; ஒற்றர்சிலர் வாசவதத்தையின் தந்தையும் அந்நாட்டரசனுமாகிய பிரச்சோதனனுக்கு அதனை அறிவித்தனர். அச்செய்தியைக் கேட்ட அரசன்,

"காமத் தியற்கை காழ்ப்பட லுணர்ந்து
கோல மன்றே குமரற் கிதுவென
எள்ளியும் உரையான் இளமைய தியல்பென"

எண்ணி முறுவல்செய்து உதயணனுல் விரும்பப்பட்ட அக்கணிகைக்குப் பல சிறப்புக்களைச் செய்தான். பிரச்சோதனனைப்போல் அப்பெண்ணின் தாயும் இளமையதியல்பை அனுபவத்தால் அறிந்திருப்பின் தன்மகளைப் 'பாண்டியனைப் பாராதே' என்று கட்டளையிட்டிருப்பாளா? ஆதலினுல் அவள் 'இளையளாய்மூத்திலள்கொல்' என்று ஐயம்பிறந்தல் பொருத்தமானதே.

இறுதியாகச் சோழன்மேற் பாடப்பட்ட செய்யுளையும் படித்தின்புறுவோம்.

சிலம்பி தன் கூடிழந்தது.

இக்காலத்திற்போலவே முற்காலத்திலும் அரசர்கள்பிறந்தநாட்களை விசேடமாகக் கொண்டாடுவதுண்டு. சோழ அரசன் பிறந்தநாள் (நட்சத்திரம்) இரேவதியாகும். அதனைச் சோழநாட்டார் மிகச் சிறப்பாகக் கொண்டாடினர். அக்கொண்டாட்டத்தைப்பற்றி முத்தொள்ளாயிர ஆசிரியர் ஒரு செய்யுள் இயற்றியிருக்கிறுர்.

நகரமாந்தர் தம் நகரத்தை அலங்கரிக்கின்றனர். வீடுகளைத் தூசி முதலியன நீக்கிப் புதுப்பிக்கிறுர்கள். சோழன் 'ஈதல் இசைபடவாழ்தல்

அதுவல்லது ஊதியம் இல்லை உயிர்க்கு' என்னும் தமிழ்மறையை நன்கறிந்தவன். ஆதலின் அம்மங்கலநாளிற் பல பொருள்களை வரையாது நல்குகின்றான். எவ்வுயிர்க்கும் செந்தண்மைபூண்டொழுகும் அந்தணர்க்குப் பசுக்களையும் செம்பொன்னையும் கொடுத்துப் பெரும்புகழ் ஈட்டுகிறான். புலவர்களுக்கு யானைகளை அளித்து அவர்கள்பாட்டினைப் பெறுகின்றான். மற்றும் பலரும் பல பேறுகளைப் பெற்று மகிழ்கின்றனர்.

இந்நிகழ்ச்சிகளைப்போன்ற இரண்டொன்றை இன்னும் கூறி முடித்தால் அவருடைய செய்யுள் சாதாரணநிகழ்ச்சிகளைமாத்திரம் எடுத்துக்கூறுவதாய் அமைந்துவிடும். அதனைப் படிக்கிறவர்களுக்கு அதிக இன்பம் கொடுக்காது. புலமைமணமும் புதுமையொளியும் அதில் இடம்பெறமுடியாது. சாதாரணமாகப் பாட்டுக்களைப் பாடுகிறவர்கள் இம்முறையில்தான் பாடிமுடிப்பார்கள். முத்தொள்ளாயிர ஆசிரியர் சாதாரணமானவரா?

அரசனுடைய பிறந்தநாட்கொண்டாட்டத்தில் எல்லாரும் பல நன்மைகளைப் பெற்றனர் என்று கூறுவது மங்கலமானது. இவற்றோடு ஒரு தீமையும் நிகழ்ந்தது என்று கூறுவது பொருத்தமற்றது. அரசன்முதலியோரால் வெறுத்து ஒதுக்கப்படத்தக்கது. இதனை யாவரும் மகிழ்ந்து ஏற்றுக்கொள்ளத்தக்கதாகச் சிறப்பமையக்கூறுவது மிக அரியசெயலன்றோ! இவ்வருமைச் செயலை முத்தொள்ளாயிர ஆசிரியர் மிக நுட்பமாகச் செய்துகாட்டுகிறார். ஒருவர் ஒன்றையிழந்தசெய்தியை ஒரு நன்னாளிற் கூறுவது அமங்கலம் என்பதற் கையமில்லை. இந்த அமங்கலத்தைக்கூறி மங்கலத்திற்கே மங்கலத்தை - அழகை - உயர்வை - ஆசிரியர் கொடுக்கிறார்;

அந்தணர் ஆவோடு பொன்பெற்றார் நாவலர்
மந்தரம்போல் மாண்ட களிறூர்ந்தார்—எந்தை
இலங்கிலைவேற் கிள்ளி இரேவதிநாள் என்னோ
சிலம்பிதன் கூடிழந்த வாறு.

என்னும் செய்யுளால். சிலந்தி ஏன் வலையை இழந்தது தெரியுமா? சோழன் பிறந்தநாட்கொண்டாட்டத்திற்காக வீடுகளை அலங்கரித்தவர்கள் தூசி சிலந்திவலை முதலியவற்றைத் துடைத்திருப்பார்களன்றோ! சிலம்பி ஏன் கூடிழந்தது? என்று ஆசிரியர் வினவுகின்றார். ஆனால் அதிற் சுவை தவழ்ந்து கொண்டிருக்கிறது. அச்சுவை செய்யுளைத் திரும்பத் திரும்பப் படிக்கும்படி தூண்டுகிறது. படிக்கப்படிக்க இன்பம் பெருகுகிறது.

இப்படி இன்பம் பெருக்குவனவே முத்தொள்ளாயிரச்செய்யுட்கள் என்பதைக் காட்டுவதற்கே இம் மூன்றுசெய்யுட்களும் எடுத்துக்காட்டப் பட்டன. இத்தகைய முத்தொள்ளாயிரத்தைப் படித்து இன்புறுதல் தமிழ் மக்கள் கடனாகும்.

மதிப்புரை

[ஸ்ரீராமகிருஷ்ணவிஜயத்தின் வெள்ளிவிழாமலர். விலை அணா. 6. கிடைக்குமிடம்:—சென்னை மயிலாப்பூர் ஸ்ரீராமகிருஷ்ணமடம்.]

தம்முடைய சிறந்த ஒழுக்கநெறியாலும் உபதேசங்களாலும் மக்கள் மனத்து இருளொழித்து அறிவுச்சுடர்திகழ்வித்து மாண்பொருள் பலவும் விளக்கி உலகம் போற்றநின்றவர் ஸ்ரீராமகிருஷ்ணபரமஹம்ஸராவர். இவரது உபதேசங்களையும் வரலாறுகளையும் மக்கள் அறிந்தொழுக வேண்டிய செந்நெறிகளையும் பிற கலைச்செல்வங்களையும் நன்கு ஆராய்ந்து இனிய தமிழ்க்கட்டுரைகளால் யாவரும் எளிதிலுணருமாறு சென்னை மயிலாப்பூர் ஸ்ரீராமகிருஷ்ணமடத்தார் மாதமொருமுறை வெளியிட்டுவரும் ஸ்ரீராமகிருஷ்ணவிஜயம், கடந்த இருபத்தைந்தாண்டுகளாகத் தமிழ்நாட்டில் உயர்ந்தபணியாற்றி ஸ்ரீராமகிருஷ்ணபரமஹம்ஸரது வெற்றிச்சின்னமாக விளங்குகிறது. அதன் வெள்ளிவிழாமலரான் நிகழும் பார்த்திவஆண்டின் மார்கழிப்பகுதியுள் அதன் ஆசிரியரும் ஸ்ரீராமகிருஷ்ணமடத்துறுப்பினரும் பிற அறிஞர்களும் எழுதியுதவிய பொருள்பொதிந்த கட்டுரைகள் பல அமைந்துள்ளன. அவை சாதி சமயம் மொழி தேயம் முதலியவற்றால் வேறுபட்ட மாந்தரும் போற்றிப்படித்துப் பயன்கொள்ளத்தக்கன. காகிதத்தட்டுமிக்க இக்காலத்தில் வெள்ளிவிழாமலர் எனற்கேற்ப ஒள்ளியகாகிதத்தில் வனப்பெலாம் ஒருங்கமைய இவ்வரும்பெறன் மலரினை அச்சிட்டு வெளியிட்டுதவிய ஸ்ரீராமகிருஷ்ணமடத்தார் நன்முயற்சி பாராட்டத்தக்கது.

[மதுரமித்திரன் பொங்கல்வெளியீடு. விலை ரூபா 1-8-0. கிடைக்குமிடம்:- ஆசிரியர், மதுரமித்திரன், நாயக்கர்புதுத்தெரு, மதுரை.]

தமிழ்மொழிக்குத் தாயகமாகத்திகழும் மதுரைமாநகரிலிருந்து வாரமொருமுறை வெளிவரும் தமிழ்ப்பத்திரிகைகளுள் உயர்திரு. ந. சுப்பிரமணியம் அவர்களை ஆசிரியராகப்பெற்றுள்ள மதுரமித்திரன் தேசத்தொண்டும் செந்தமிழ்த்தொண்டும் திறம்படச்செய்துவருவதொன்று. இதன் பொங்கல்வெளியீடு, நவிலும் நாவுக்கும் கேட்கும் செவிக்கும் இனியனவான கவிகளும், காணும் கண்ணுக்கினியனவான பெரியோர் நாட்டுத்தொண்டர் மொழித்தொண்டர் செல்வர் முதலியோருடைய படங்களும், கருத்துக்கினியனவாயுள்ள காவியச் சுவையினையும் இசைநாடகங்களையும் தேசத்தொண்டர் செய்திகளையும் சரித்திரம் சிறுகதைகளையும் பிறவற்றையும் விரிக்கும் கட்டுரைகளும் கொண்டு விளங்குகிறது. இவை பலதிறப்பட்ட மக்களும் பார்த்தும் கேட்டும் படித்தும் இன்புறத்தக்கன. மதுரமித்திரன் மேலும் இன்னோரன்ன வெளியீடுகளால் நாடும் மொழியும் நலம்பெற முயன்று நெடிதுவாழ்க.

திருக்குறுக்கைச் சிவன்கோயிற் கல்வெட்டுக்களின் சுருக்கங்கள்

திருவாளர். வை. சுந்தரேசவாண்டையாரவர்கள், திருவையாறு.

திருக்குறுக்கை என்பது சோழநாட்டுத் தேவாரம் பெற்ற தலங்களுள் ஒன்றாகும். இது திருநாவுக்கரசராற் பாடப்பெற்றது; பழமையும் பெருமையும் வாய்ந்தது. இத்திருக்கோயிலிலிருந்த இருபத்தொருகல்வெட்டுக்களை அரசாங்கத்தார் படியெடுத்துச்சென்றுள்ளனர். அவைகள் இதுகாறும் தென்னிந்தியக் கல்வெட்டுத்தொகுதிகளில் (South Indian Inscription Volumes) வெளிவந்தில. ஆனால் அவைகளின் சுருக்கங்கள் 1927-ஆம் ஆண்டுக் கல்வெட்டறிக்கையில் தோன்றியுள்ளன. அவ்வறிக்கையும் இக்காலம் கிடைப்பது அருமையாயுள்ளது. இந்நிலையில் தருமபுரஆதீனத்தில் இருபத்துநான்காம்பட்டத்தில் வீற்றிருந்தருளிய மகாசந்நிதானத்தின் கட்டளைப்படி, இக்கோயிலிற் பொறிக்கப்பெற்றிருந்த கல்வெட்டுக்களிலே சிதைந்தனபோக எஞ்சியவைகளைப் படித்து எழுதியுள்ளேன்.

இவற்றுள் முதலாம் இராசராசன்காலத்தது ஒன்று, விக்கிரமசோழன் காலத்தது ஒன்று, கோப்பெருஞ்சிங்கன்காலத்தது ஒன்று, விசயநகர வேந்தர்காலத்தன இரண்டு; எஞ்சியன மூன்றாங்குலோத்துங்கன், இராஜாதிராஜதேவன் என்போர் காலத்தவைகளாயுள்ளன.

இவைகளின் சுருக்கங்கள் ஆராய்ச்சியாளர்க்குப் பயன்படுமென்று எண்ணி நம் "செந்தமிழில்" வெளியிடலானேன்.

மகாமண்டபத்தை எடுப்பித்தவன்.

இத்திருக்கோயிலின் மகாமண்டபத்தையெடுப்பித்தவன் மூன்றாங் குலோத்துங்கசோழமன்னனாவன். இச்செய்தி,

"ஸ்வஸ்திஸ்ரீ இத்திருமண்டபம் மதுரையும் பா.........
ன் முடித்தலையுங் கொண்டருளிய குலோத்துங்க சோ..."

என்னும் கல்வெட்டுப்பகுதியால் புலனாகின்றது. [இதன் எஞ்சிய பகுதிகள் ஒருசெங்கல்தூணினுள்வைத்துக் கட்டப்பட்டுள்ளன.]

இரண்டாங்கோபுரவாசலின்பெயர்.

இரண்டாங்கோபுரத்திருவாயிலுக்கு மநுவரசன் திருவாசல் என்று பெயர். இவ்வாறு, அவ்வாயிலின் வடபக்கத்து நிலைக்கல்லிற் பொறிக்கப் பெற்றுள்ளது.

இறைவன் திருப்பெயர்.

திருக்குறுக்கையுடைய திருவீரட்டானமுடையார்.

வீதிக்கு எழுந்தருளும் இறைவன்பெயர்.

திருவீதிக்கு எழுந்தருளும் இறைவனுக்குக் கூத்தராய் வீதிபோந்தார், வீதிவனநாதர் என்னும் இருபெயர்களும் வழங்கிவந்துள்ளன.

தேவிபெயர்.

பெரியநாச்சியார். மூன்றாங்குலோத்துங்கன் அரியணையேறிய இருப தாம் ஆண்டில் பொறிக்கப்பெற்றிருக்கும் "பலிசையால் முதலானநெல்லில் திருப்பள்ளியறை பெரியநாச்சிக்கும்.........நெல்லு குறுணியும்" என்னும் பகுதியால் இப்பெயர் உள்ளமை அறியக்கிடக்கின்றது.

எழுந்தருளுவித்த படிமங்கள்.

இவ்வூரில் காணியுடைய பெரிய அகப்பரிவாரப்பெண்டுகளில் உமையாழ் வார் என்னும் அம்மையார் இத்திருக்கோயிலில் திருப்பள்ளியறைநாச்சியார், ஆள்கொண்டநாயகர், அவரது நாச்சியார் ஆகியோர் படிமங்களை எழுந் தருளுவித்துள்ளார். கோப்பெருஞ்சிங்கதேவன் கல்வெட்டால், திருவலஞ் சுழியுடையாரையும் இங்குப் பிரதிட்டைசெய்விக்கப்பெற்றசெய்தி அறியக் கிடக்கின்றது.

திருவிழா.

"இக்கோயில் உடையார் கூத்தர் வீதிபோந்தார்க்கு திருவைகாசித்திரு நாள் திருவெழிச்சிப்புற இறையிலியாகவும், இந்நிலத்து எட்டுப்படிநெல் லுக்கு ஒக்க தலைமாறு பிடாகை சோழபாண்டிய நல்லூரில் ஒழுகிநபடி வரி நீர்கில தரமில்" என்னும் பகுதியால் ஆண்டுதோறும் வைகாசித்திங்களில் திருவிழா நடைபெற்றுவந்தமை அறிகின்றோம்.

திருக்குறுக்கைச் சிவன்கோயிற் கல்வெட்டுக்களின் சுருக்கங்கள் ருஎ

தலவரலாற்றை வற்புறுத்தும் ஆதாரம்.

முதற்கோபுரத்தின் மேற்குப்பக்கத்தில் "குறுங்கைமஹாமுனிரிஷி நித்தியம் சதாசேர்வை" என்று எழுதப்பெற்றுள்ளது. இதற்குக் கீழே குறுங்கைமுனிவரின் படிவமும் இருக்கின்றது. இச்செய்தி இத்தலவரலாற்றை வற்புறுத்தும் ஆதாரமாயுள்ளது.

அளிக்கப்பெற்ற நிபந்தங்கள்.

இராஜாதிராஜதேவரின் ஆறும் ஆண்டில் திருக்குறுக்கையான விக்கிரமசோழ சதுர்வேதிமங்கலத்து மகாசபையார் திருவீரட்டானமுடையார்க்குச் சந்திராதித்தவரை திருஅர்த்தசாமத்துக்கு நாளொன்றுக்கு நூறு செங்கழுநீர்த்திருப்பள்ளித்தாமம் நித்தற்படி சாத்தக்கடவதன்பொருட்டு ஊரின் கீழ்பால் நிலம் அளித்துள்ளனர்.

மேற்குறித்தமன்னரின் பதினுன்காவது ஆண்டில் திருக்குறுக்கையுடைய திருவீரட்டானமுடையார்க்குத் திருநந்தவன உடலாக, உய்யக்கொண்டார்வளநாட்டு, அம்பர் அருமந்தை அரையன் சீ வேதவனப்பெருமான், குறுக்கையான இருமடிசோழசதுர்ப்பேதிமங்கலத்தில் பிறந்த குலோத்துங்கசோழநல்லூரில் ஒன்பதுமா முக்காணி நிலத்தை விலைக்குவாங்கிக்கொடுத்துள்ளான். [உடலாக—மூலதனமாக.] மூன்றாங் குலோத்துங்க சோழதேவரின் பதினொன்றும் ஆண்டில் திருஞானசம்பந்தப்பெருமானுக்குத் திருவிளக்குப்புறமாகப் பலர்பக்கலும் நிலம் கொண்டு விடப்பட்டுள்ளது. இதைக்குறிக்கும் கல்வெட்டில் "குறுக்கைநாட்டுத் திருக்குறுக்கையுடைய திருவீரட்டானமுடையார்கோயிலில் கும்பிட்டு இருக்கும் ஆண்டார் பாலுழாந் பெரியார் திருஞானசம்பந்தர்" என்று இந்நாயனுர் பாராட்டப் பெற்றுள்ளார்.

இராஜாதிராஜதேவரின் பன்னிரண்டாம் ஆண்டில் வீதிவிடங்கன் செம்பியன் பல்லவரையன் உள்படச் சிலர் திருநந்தாவிளக்கு ஒன்றினைச் சந்திராதித்தவல் எரிக்கக்கடவதற்கு நற்காசு ஐம்பதை வைத்துள்ளனர்.

மூன்றுங்குலோத்துங்கதேவரின் இருபதாம் ஆண்டில் திருநாவுக்கரசு திருக்குகையில் எழுந்தருளின மாகேசுவரர்களுக்கு அமுதுசெய்வித்தருள நூற்றிருபத்து ஐங்கலனே தூணிநெல் வைக்கப்பட்டுள்ளது. இந்நெல்லைப் பலர்க்கும் பொலிசைக்கு உபயமாகக்கொடுத்துப் பலிசையால் முதலான

நெல்லைக்கொண்டு அவ்வறம் நடத்தப்படவேண்டுமென்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. [குகை—மடம். மாகேசுவரர் — சிவனடியார்]

மனைவிற்பனை.

மூன்றாங்குலோத்துங்கசோழனின் முப்பதாம் ஆண்டில் இக்கோயில் ஸ்ரீமாகேசுவரகங்காணிசெய்வாரும் ஸ்ரீகாரியஞ்செய்வாரும், தேவதானம் கோயில் கணக்கரும் உள்ளிட்ட அனைவரும் இக்கோயில் திருமடவிளாகத்து இருந்த ஆண்டார் ஜயங்கொண்ட சோழமண்டலத்து மணவில்கோட்டத்துப் பழையனூர்நாட்டு உடையார் நெல்மலிகிழான் திருவேகம்பமுடையான் கந்தையாபரணர்க்குக் குகையாக அஞ்சரைக்கோல் மனையை நூறுகாசுக்கு விற்று அதை ஸ்ரீபண்டாரத்தில் ஒடுக்கலாயினர்.

பண்டைவழக்கம்.

"ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவன சக்கரவர்த்திகள் ஸ்ரீராஜாதிராஜதேவர்க்கு யாண்டு ஆறாவது ... ... ஞாயற்று பூர்வபக்ஷத்து திதியையும் சனிக்கிழமையும் பெற்ற புனர்பூசத்துநாள் விருதராஜபயங்கரவளநாட்டுக் குறுக்கையான விக்கிரமசோழசதுர்ப்பேதிமங்கலத்து மகாசபையோம். நம்மூர் உடையார் திருவீரட்டானமுடையார்கோயிலில் மூலப்பிரத்தியரான ஆதிசண்டேசுவரதேவர்க்கு நாங்கள் ஊர்க்கீழ் இறையிலிசெய்துகொடுத்த பரிசாவது:— உடையார் திருவீரட்டானமுடையார்க்குத் திருவர்த்தசாமத்துக்கு" என்னும் இக்கோயிற் கல்வெட்டுப்பகுதியால் சிவாலயங்கட்குச் சண்டேசர்பெயரால் சாசனஞ்செய்துகொடுக்கும்வழக்கம் முற்காலத்தில் இருந்தது என்பதை அறிகின்றோம். [மூலப்பிரத்தியர்—பழையஅடியார்]

பிற குறிப்புக்கள்

இவ்வூருக்கு அருகிலுள்ள பனையூர், ஆற்றூர் என்னும் ஊர்களின் பெயர்கள் இக்கோயிற் கல்வெட்டுக்களிற் காணப்படுகின்றன. இவற்றுள் ஆற்றூர், இராஜநாராயண சதுர்வேதிமங்கலம் என்னும் வேறுபெயருடன் வழங்கப்பெற்றுவந்தது. பனையூரிலுள்ள கோயிலுக்குச் சாமுண்டீச்சரம் என்பது பெயர். அது கங்கைகொண்டசோழபுரம் தேவதானமாக விளங்கியிருந்தது.

குறுங்கைவிநாயகர்கோயிலின் வடபுறச்சுவரில் உள்ள கல்வெட்டு வீரப்ரதாப தேவராயமஹாராயருடையதாகும். இதனால் இவர் பொப்பனூரில் ஜயஸ்தம்பம் நிறுத்தியசெய்தியும் பிறவும் அறியக்கிடக்கின்றது.

படை*

முன்னுரை

தமிழரசர்வைபவம் என்ற தலைப்பின்கீழ்ப் பேசப்பெறும் பொருள்களுள் இரண்டாவதாகக் குறிக்கப்பெற்றிருக்கும் படை அரசர்க்கு முதலாவதாகவேண்டும். அப்படையில்லையானால் அரசும் இல்லையாம்.

படையென்னும் சொற்பொருள்

உலகோரை ஒருங்குடன் ஆட்டுவித்த கொடிய பெரிய போர் மூண்டு முடிந்துள்ள இந்நாளிலே படையென்னும் சொற்பொருளும் ஆராயத்தகுவதே.

படு என்னும் பகுதிமேல் ஐ என்னும் விகுதிகூடி ஆகியதே படையென்னும் சொல். படுதல் என்பது உண்டாதல், அழிதல் என்னும் பொருளுடையது. படுத்தல் என்பது உண்டாக்குதல், அழித்தல் என்னும் பொருளுடையது. அதனால் படை என்பது ஆகியது-அழிப்பது-ஆக்குவது என்னும் மூன்றுபொருள் குறித்து நிற்பதாம். ஆகவே ஆகியதும் அழிப்பதும் ஆக்குவதும் என்னும் மூன்றுதன்மையது படை என்பதாம்.

படையின் முத்திறம்

ஆயின் அது எதனால் ஆகியது? எதனை அழிப்பது? எதனை ஆக்குவது? எனின் அது பொருளால் ஆகியது—பகையை அழிப்பது—பொருளையுண்டாக்குவது எனல் தகும்.

சீவகசிந்தாமணியிலே வருகின்ற ஒரு பாட்டால் அம்மூன்று தன்மையும் தெளிய உணரலாம். அது,

> "பொன்னின் ஆகும் பொருபடை; அப்படை
> தன்னின் ஆகும் தரணி; தரணியிற்

---

* இது, மதுரையிலுள்ள இராமேசுவரதேவஸ்தான பாடசாலையுதவித் தமிழாசிரியர் திரு. பண்டித. ஆ. சிவசுப்பிரமணியஐயரவர்களால் 13-12-45ல் திருச்சி வானொலிநிலையத்தில் ஒலிபரப்பப்பெற்றது; அவ்வானொலிநிலையத்தாரனுமதிபெற்று வெளியிடலாயிற்று.

பின்னை யாகும் பெரும்பொருள்; அப்பொருள்
துன்னுங் காலைத் துன்னாதன இல்லையே"

என்பதாம். இதன் பொருள், பொருளாலே போர்செய்தல்வல்ல படை ஆகும். அப்படையால் வேற்றரசர்நாடு தம்வசமாம். அந் நாட்டினால் அரும்பொருள்வருவாயாகும். அப்பொருள் கிட்டும் போது கிட்டாத அரியபொருள் யாதும் இல்லை: என்பது.

இந்தப் பாட்டினால் அறியும் மற்றோர் உண்மையும் உண்டு. அஃதாவது, காலதேசவர்த்தமானங்களின் இயல்பறிந்து மூலதனம் பெருவாரியாக முன்னேபோக்கி, வாணிகம்செய்து பின்னே அரும் பொருளீட்டிப் பெருநிதிக் கிழவராகிச் சிறப்பெய்தும் குலவணிகரே போலப் பெரியாரைத்துணைக்கொண்டு வலியும் காலமும் இடனும் வாலிதின் அறிந்து அரும்பொருட்செலவிற் பெரும்படைகொண்டு தம்மை வலுப்படுத்துப் போர்மேற்சென்று, வேற்றரசரைப் பணி வித்து, அவர்மண் கவர்ந்து அரும்பொருளீட்டிப் பேரரசாகிச் சிறப் பெய்துதலும் அரசர்க்கு முறையேயாம் என்பது. சுருங்கக்கூறின் பொருளில்லா வணிகனும் படையில்லா அரசனும் ஒப்பர் எனலாம். வள்ளுவனாரும் அரசியலிலே,

"ஆக்கங் கருதி முதலிழக்குஞ் செய்வினை
ஊக்கா ரறிவுடை யார்"

என்புழி, ஆக்கம்—முதல் என்ற சொற்களை வழங்கியிருத்தலும் நினையத்தகும். "இழக்கும் வினையாவது பிறர்மண்கொள்வான் சென்று தம்மண்ணும் இழத்தல்போல்வன" என்றார் பரிமேலழக ரும். உதாரணம் ஐப்பான். அன்றென்ன? இன்றுதானென்ன? என்றுமே படைவலிமிக்கார் பிறர்மண்ணும் கவர்ந்து பேரரசாகிச் சிறத்தலும், அஃதில்லார் தம்மண்ணும் இழந்து தாழ்வுறுதலும் அநுபவசாத்தியமான உண்மையேயாமன்றே?

படையின் இன்றியமையாமை

அமைச்சு, நாடு, அரண், பொருள், படை, நட்பு என்னும் இவ்வாறும் அரசற்கு உறுப்பு என்பர் பொருள்நூலோர் (ராஜாங் கம் என்பதும் அது). இம்முறையே முறையாக அதிகாரம் வகுத்த வள்ளுவனாரும், படையின் இன்றியமையாமை கருதி, "படை குடி கூழ் அமைச்சு நட்பு அரண்" என்று முறைமாற்றிப்

படையை முதலிலேவைத்ததுமல்லாமல், படைமாட்சியென்னும் அதிகாரத்திலே, "வெல்படை - வேந்தன் வெறுக்கையு ளெல்லாந் தலை" என்று அதன் தலைமை விளங்கவும் கூறினார். "ஒழிந்த அங்கங்கட்கும் அரசன் தனக்கும் காவலாகலின்....'தலை' என்றார்" என விளக்கினார் உரைகாரரும்

படையின் உறுப்பு

அரசற்கு உறுப்பிற் சிறந்ததாகிய படை தானும் உறுப்பாற் சிறப்பதாம். வள்ளுவனாரும், "உறுப்பமைந்து ஊறு அஞ்சா வெல்படை" என்றார். அவ்வுறுப்பு யாது? எனின் யானை, குதிரை, தேர், காலாள் என்ற நான்குமாம். "ஈண்டுப் படை என்றது அந்நான்கன் தொகுதியை" என்று படை என்பதனை விளக்குமிடத்தே பரிமேலழகரும் கூறினார்.

1 "..........கொல்்களிறும்..........கலிமாவும்
..........நிமிர்தேரும்..........புகன்மறவரும் என
நான்குடன் மாண்டது" (புறம்—55)

2 "...............பணைத்தாள் யானையும்
கொடிநுடங்கு மிசைய தேரும் மாவும்
படையமை மறவரொடு துவன்றிக் கல்லெனக்
கடல்கண்டன்ன கண்ணகன் தானை" (புறம்—351)

என்பவற்றால் படைக்கு உறுப்பாவன அறியலாம். ஆகவே யானை, குதிரை, தேர், காலாள் என்னும் நான்குறுப்பாலமைந்தவொன்றனையே அக்காலத்தார் படை என்று கொண்டமை புலனாம்.

தொல்காப்பியம் என்னும் பழைய இலக்கணநூலிலே தும்பைத்திணைத்துறைகூறும் சூத்திரப்பகுதி,

"தானை யானை குதிரை யென்று
நோனார் உட்கும் மூவகை நிலை"

என்பது. அதிலே யானை, குதிரை, தேர், காலாள் என்ற முறை தவிர்த்துத் தானை, யானை, குதிரை என்று மாறிக்கூறியதற்கும், தேரைக் கூறாது விடுத்ததற்கும் சமாதானமாகத் "துறக்கம்புகு வேட்கையுடைமையிற் காலாளை முற்கூறி, அதன்பின்னர் மதத்தாற் கதஞ்சிறந்து தானும் போர்செய்யும் யானையைக் கூறி, மதத்தாற் (கதஞ்)சிறவாமையின் கதஞ்சிறவாத குதிரையை அதன்பிற்

கூறினர். குதிரையானன்றித் தேர் தானே செல்லாமையின் தேர்க்கு மறமின்று என்று அது கூறாராயினர்" என்றெழுதிய நச்சினார்க்கினியரின் அரியஉரைப்பகுதியாலும் படையினது உறுப்பும் முறையும் தெளிய உணரலாம்.

படையை ஆண்டமுறை

வென்றியெய்துமுபாயத்தாற் பகைவரைப் பலபகுதியினராகப் பிரித்துவிடுதல்கருதிப் போர்முனையை அகலச்செய்தற்கும், மதிலரணை முருக்குதற்கும், உண்ணும் நீர்த்துறைகளைக் கலக்குதற்கும் யானைப்படையையும், மதிற்புறத்தே சூழ்போகிய காவற்காட்டை விரைவிலே வளைத்துக்கொள்ளுதற்கும், அகமதிற்கு அகழிகடந்தேறப்போதற்கும் குதிரைப்படையையும், விளைவயல் பரந்த பிரதேசங்களை யழித்தற்கும், அகநகரை விரைவில் அகப்படுத்துக் கொல்குறும்பறுத்தற்கும் தேர்ப்படையையும், தலையாக யானைப்படையை அழித்தற்கும் பிறவற்றிற்கும் காலாட்படையையும் தமிழரசர் உபயோகித்தனர் என்பது புறநானூறு முதலிய பழைய நூல்களாற் கருதக்கிடக்கின்றது.

படைக்குரிமரபினோர்.

வீரத்தையே குலதனமாகப் பெற்றுவந்திருக்கும் சிறப்பினையுடைய ஒரு குறிப்பிட்ட குடிப்பிறந்தாரையல்லாற் பிறரைப் படைக்குரியரெனத் தமிழரசர் கொண்டாரல்லர். அவ்வரசர் பாராட்டக்கிடந்த குடியும் முதுகுடியாம் என்பர். அக்குடியைக்,

"கற்றோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளோடு
முற்றோன்றி மூத்த குடி"

எனச் சிறப்பிக்கும் வெண்பாமாலை. இக்குடிமகளிரும் வீரத்தாற் சிறந்தோரேயாவர். வீரத்தாய்மார் என்றும் தமிழர்வீரம் என்றும் நம்மிற் பலரும் பேசவும் எழுதவும் காரணமாயுள்ள சான்றோர்செய்யுளெல்லாம் அம்முதுகுடிபோர்சிறப்பினையே கூறுவனவாதல் கருதத்தகும். இக்குடிப்பிறந்தாரால் ஆகியதே படை என்பது "வழிவந்த வன்கண்ணதுவே படை" என்னும் குறளாலும், 'தொன்றுதொட்டுவந்த தறுகண்மையாவது,

"கன்னின்றான் எந்தை கணவன் களப்பட்டான்
முன்னின்று மொய்யவிந்தார் என்னையர்—பின்னின்று

கைபோய்க் கணையுதைப்பக் காவலன் மேலோடி
எய்போற் கிடந்தானென் னேறு"

என்பதனாலும் அறிக' என்ற விளக்கவுரையாலும் அறியலாம்.

சிற்றரசும் பேரரசும்

இவ்வாறாகிய படையின் சிறுமை பெருமைகட்கு ஏற்ப அரசரும் சிற்றரசர் பேரரசர் எனப்பட்டார் - என்னலாம்.

"சிறுபடையான் செல்லிடம் சேரின் உறுபடையான்
ஊக்கம் அழிந்து விடும்"

என்பது குறள். "ஆறும் உடையான் அரசருளேறு" என்று வேந்தருள் மிக்கானை எடுத்துக்காட்டாகக்கொண்டு அவன் மாட்சிகளைக்கூறிப் பின் அவன் செய்யத்தகுவனவும் அல்லாதனவும் இவையெனக் கூறிவருகின்ற வள்ளுவர் இக்குறளிலே அம்மிக்கானை "உறுபடையான்" என்றும் மற்றையோனைச் "சிறுபடையான்" என்றும் கூறியுள்ளமைகாணின், சிற்றரசர் பேரரசர் என்ற பாகுபாட்டினை அக்காலத்தவர் படையினது சிறுமை பெருமை நோக்கியே வகுத்துக்கொண்டனர் என்பது தேறப்படும்.

படைத்தலைமை

படைத்தலைமை பெரும்பான்மையும் அரசருடையதேயாம். போர்முனைக்குச்சென்று தாமே முன்னின்று போர்நிகழ்த்திய அரசர்பலருடையசெய்தி பழைய தமிழ்நூல்கள் கூறுதலால் அவ்வுண்மை தேறப்படும். சிறுபான்மை அவ்வரசரால் நம்பி, ராயன், ஏனாதி என்று இன்னோரன்ன சிறப்புப்பெற்ற படைவீரர்தலைமையின்கீழும் படை போர்செய்தலுண்டு. தொல்காப்பியத்து வஞ்சித்திணைத்துறைகளுள்ளே,

"மாராயம் பெற்ற நெடுமொழியானும்"

என்பது ஒருபகுதி. (மாராயம்—சிறப்பு.) "சிறப்பாவன: ஏனாதி காவிதி முதலிய பட்டங்களும் நாடும் ஊரும் முதலியனவும் பெறுதலுமாம்...—இஃது அப்படைக்கு ஒருவனைத் தலைவனாக்கி அவன் கூறியனவே செய்க அப்படை என்று வரையறைசெய்தது" என்றெழுதிய நச்சினார்க்கினியர் உரைப்பகுதி இங்கு நினையத்தகும்.

மற்றைச்செய்திகள்

தமிழரசர்படைதிரட்டியவகை, படைக்கு அமைத்த தொகை, படைக்குச் சாதனமியற்றியமுறை, அவற்றின் பயிற்சியளித்த வகை, படையோரைத் தாங்கிய முறை, போர்நிகழாக்காலத்தே படையின்செய்தி: என்று இவைபோல்வனவும் தமிழ்நூல்களால் ஊகித்துக்கொள்ளக்கிடப்பனவாம். மேற்கோளும் விளக்கமும் விரிவஞ்சி விடுக்கப்பட்டன.

முடிவுரை

பொருளாலாவதும் - பகையை அழிப்பதும் - பொருளையுண்டாக்குவதும் என்னும் மூன்று திறமுடையதும், ஒழிந்த அங்கங்களுக்கும் அரசன் தனக்கும் காவலாயமைதலின் அரசற்கு உறுப்பாகிய ஆறனுள் தலைசிறந்ததும், யானை குதிரை, தேர், காலாள் என்னும் நான்கு உறுப்பால் அமைவதும், வழிவந்த வன்கண்மையுடைய முதுகுடிப்பிறந்தோராலானதுமாகிய பெரியபடையுடனே இத்தமிழகத்தை ஆண்ட திருவுடைமன்னர் சேர சோழ பாண்டியர் என்பார் மூவராவர். அவர்கள், "படைப்புக்காலந்தொட்டு மேம்பட்டுவரு" குடியினர் என்பது பரிமேலழகர்கொள்கை. அம்மூவரும் தமிழகத்தை மூன்று மண்டிலமாகக்கொண்டு தத்தம் பெயர் விளங்க ஆண்டனரேனும் - ஒருதாய்வயிற்றின் உடன்பிறந்து உரிமையெய்திய உடன்பிறப்பாளரொத்த மனத்தினராயிருந்தமையால் ஓரோர்காலத்தே அவர்கள் தம்முட் கலகமிட்டுச் சமர் விளைத்தனரேனும், அகத்தியம் தோன்றியநாளிலிருந்து கடைச்சங்கநூலாகிய சிலப்பதிகாரந்தோன்றியகாலம்வரையும் வேற்றரசர் இத்தமிழகத்தே காலடி எடுத்துவைக்கவும் அநுமதியாததோடு தமிழரை இகழ்ந்த வடவாரியரை அலறச்சென்று தாக்கி இமயங்காறும் சென்று அங்குத் தங்கள் இலச்சினையாகிய வில்லும் புலியும் கயலும் எழுதி மீண்ட சிறப்பினர் என்பது சரிதநிகழ்ச்சிகூறும் சிலப்பதிகாரக்காவியத்தால் அறியப்படும் உண்மையாம். தொல்காப்பியமும் இத்தமிழகத்தை "மூவர் தண்பொழில் வரைப்பு" என்றன்றோ சிறப்பித்தது?